## கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணனி கற்கை நிறுவகம் - 2014

கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணனி கற்கை நிறுவகத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களையும் ஏனைய விளக்கத் தகவல்களையும் உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107(5) ஆம் உப பிரிவு மற்றும் 18 ஆம் பிரிவின் கீழ் விதிக்கப்பட்ட 2002 இன் 01 ஆம் இலக்க கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணனி கற்கை நிறுவக வழிகாட்டியின் 23 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணனி கற்கை நிறுவகத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டுக் நியமம்

முழுமையாகப் பெறுமானத் தேய்விடப்பட்ட ரூபா 1,235,809 கிரயத்திலான சொத்துக்கள் தொடர்ந்தும் நிறுவகத்தினால் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்த போதிலும் அதன் நியாயமான பெறுமதியைக் காண்பிக்கும் வகையில் மீள்மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி ரூபா 50,077 தொகையான அட்டுறு செலவினங்கள் நிதிக்கூற்றுக்களிலிருந்து விடுபட்டிருந்தன.

(ஆ) பட்டப்பின் படிப்பு பாடநெறிக்காக 2015/2016 ஆம் ஆண்டிற்காக மீளாய்வாண்டின் இறுதியில் கிடைத்த மொத்த பாடநெறிக் கட்டணம் ரூபா 51,060,000 தொகையான போதிலும் நிதிக்கூற்றுக்களில் முற்பணமாகக் கிடைத்த பாநெறிக் கட்டணங்களாக ரூபா 51,082,500 வரை காணப்பட்டமையால் நடைமுறைப் பொறுப்புக்கள் ரூபா 17,500 தொகை குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

#### 2.2.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

மீளாய்வாண்டிற்கான நிதிச் செயலாற்றல் அறிக்கையின் படி வெளிவாரி பரீட்சை நிலையங்களின் (EDC) மூலம் நடாத்தப்படுகின்ற Bachelor of Information Technology (BIT) பாடநெறியின் வருமானம் மற்றும் வெளிவாரி பரீட்சை நிலையத்தினால் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களில் குறிப்பிடப்பட்ட அந்த வருமானத்துடன் இணக்கஞ் செய்த போது ரூபா 1,867,934 தொகையான வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

### 2.3 போதியளவான அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

1978 இன் 16 ஆம் இல்கக பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 99(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவகத்தினால் உழைக்கப்பட்ட சகல வருமானங்களும் நிறுவக நிதியத்தின் பகுதியொன்றாக இருக்க வேண்டியிருந்ததுடன் 2006 திசெம்பர் 22 ஆந் திகதிய PF/423

ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு முரணாக நிதிக் குழுவின் அங்கீகாரத்தின் அடிப்படையில் நிறுவகத்தினால் வைத்திய காப்புறுதி நிதியமொன்று ஏற்படுத்தப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 4,739,294 தொகையான மீதியொன்று காணப்பட்டது.

**2.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த 05 வெளிநாட்டு செயற்திட்டங்களில் காணப்பட்ட ரூபா 11,559,430 தொகையான நிதிய மீதிகள் 3 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது செலுத்த வேண்டிய கணக்கின் கீழ் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் பல்வேறு காரணங்களினால் சேவை முடிவுறுத்தப்பட்ட நிறுவகத்தின் 7 உத்தியோகத்தர்களிடமிருந்தும் ஊழியர்களிடமிருந்தும் நிறுவகத்திற்கு அறவிடவேண்டியிருந்த ரூபா 234,874 தொகையான கடன் மீதி 5 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக அறவிடப்படாது காணப்பட்டதுடன் இந்தப் பணத்தை ஊழியர் சேமலாப நிதியத்திலிருந்தேனும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) நிறுவகத்தினால் செயற்படுத்தப்படுகின்ற தகவல் பாதுகாப்பு தொடர்பான செயற்திட்ட (Master of Science in Information Security (MSC in IS)) முதுமாணி பாட நெறியிலிருந்து 2013 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்து கிடைக்க வேண்டியிருந்த ரூபா 30,000 தொகை 2015 ஆகஸ்ட் 31 வரையிலும் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 371 | முற்பணம் வழங்கும் போது உரிய செயற்பாட்டிற்கான மதிப்பீட்டின் படி போதியளவான நிதி வழங்கப்பட வேண்டிய போதிலும் 18 சந்தர்ப்பங்களில் 8 உத்தியோகத்தர்களுக்காக ரூபா 230,245 தொகையான முற்பணம் மேலதிகமாக வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. |
| (ஆ) | 2002 இன் 01 ஆம் இலக்க கொழும்பு பல்கலைக்கழக கணனி கற்கை நிறுவக வழிகாட்டியின் 3(இ)(ஈ) பிரிவு | நிறுவகத்தினால் ஆரம்பிக்கப்பட்ட பட்டப்படிப்பு மற்றும் ஏனைய பாடநெறிகளுக்காக பல்கலைக்கழக ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளவேண்டிய போதிலும் நிறுவகத்தினால் நடாத்தப்படுகின்ற 06 பாடநெறிகளுக்கு உரிய அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2006 திசெம்பர் 22 ஆந் திகதிய PF/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | நிதியத்தை உருவாக்கும் போது திறைசேரியின் அங்கீகாரம் பெறப்பட வேண்டிய போதிலும் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 9,960,290 கூட்டுத்தொகையான நான்கு நிதியக் |

கணக்குகளுக்கு உரிய அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி விளைவுகள் ரூபா 30,988,222 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 75,145,030 ஆக இருந்தது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 44,156,808 தொகை குறைவடைந்தமைக்கு ஊழியர் நிர்வாகச் செலவினம் ரூபா 20,408,301 இனால் ஒப்பந்தச் சேவைச் செலவினம் ரூபா 3,885,343 இனாலும் அதிகரித்தமையும் நிகழ்ச்சித்திட்ட வருமானம் ரூபா 16,337,813 இனால் குறைவடைந்தமையும் பிரதானமாகத் தாக்கமளித்திருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 உடன்படிக்கை மற்றும் பிணைமுறிகளை மீறுதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கல்விசார் மற்றும் கல்விசாரா பதவியணியினர் நிறுவகத்துடன் கைச்சாத்திட்ட உடன்படிக்கை மற்றும் பிணைமுறிகளை மீறியதன் காரணமாக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 11,011,710 தொகை அறவிட வேண்டியிருந்ததுடன் அந்தப் பெறுமதியை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) விரிவுரையாளர்களிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 3,440,575 தொகையான உடன்படிக்கைப் பிணைமுறிகளின் பெறுமதிக்குரிய விரிவுரையாளர் தொடர்பான தகவல்களை கண்டறிவதற்கு முடியாமையின் காரணமாக அறவிடுதல் நிச்சயமற்றதாக இருந்ததுடன் அதனை அறவிடுவதற்காக போதியளவான பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2 நிதியத்தின் குறைவான பயன்பாடு

மூலதன மானியமாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நிறுவகத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 3,103,213 தொகை மூன்று வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் செலவிடப்படாது கணக்குகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததடன் அந்த நிதியை ஆக்கபூர்வமானதாக பயன்படுத்துவதற்காக செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவகத்தினால் சொத்துக்களை கைப்பற்றும் நோக்கத்தில் உருவாக்கப்பட்ட இரண்டு நிதியங்களில் ரூபா 4,843,802 கூட்டுத்தொகையான மீதி காணப்பட்டதுடன் மீளாய்வாண்டின் போது சொத்துக்களைக் கொள்வனவு செய்வதற்காக இந்த நிதியம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் நிதியத்தில் பெறுவனவுகளை விஞ்சி செலவு செய்யப்பட்டமை காரணமாக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந்

திகதியில் உள்ளவாறு ரூபா 6,137,408 தொகையான மறை மீதியொன்று அவதானிக்கப்பட்டது.

**5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளின் குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகத்தின் பணிப்பாளரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) சொத்துக் கட்டுப்பாடு
(ஆ) உடன்படிக்கை மற்றும் பிணைமுறி
(இ) நிதிக் கட்டுப்பாடு